பக்கங்கள் 21+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மாசி 07 வியாழக்கிழமை 19.02.2026 | அதிர்வு 202

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய

## 22 இந்திய மீனவர்கள் அதிரடியாகக் கைது!

நான்கு படகுகளும் பறிமுதல்



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறி நுழைந்து 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

இந்தியா - இலங்கை இடையே புதிய இராஜதந்திர அத்தியாயம்:

## மோடி - அநுர விசேட சந்திப்பு!

அரசுமுறைப் பயணமாக இந்தியா சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பு நேற்று இரவு புதுடில்லியில் நடைபெற்றது.

புதுடில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு குறித்துத் தலைவர்கள் விரிவாகக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியினால் வழங்கப்பட்ட விசேட இரவு விருந்துபசாரத்திலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உத்தியோகபூர்வ அழைப்பினை ஏற்று, புதுடில்லியில் நடைபெற்று வரும் 05▶



# சரணடைய மறுத்த புலிகள்; முறிந்த பேச்சுவார்த்தைகள்

## 2009 மே 17 இன் பின்னணியை விளக்கும் முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா



**இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகளின் தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைந்திருந்தால், அவர்கள் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்கள் என்றும், பிரபாகரன் வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்திருப்பார் என்றும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.** 05▶

கரைத்துறைப்பற்று பிரதேச சபை தொடர்பில்

# தமிழரசுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி

## இன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு

முல்லைத்தீவு, கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து தம்மை வெளியேற்றி, அந்த இடத்துக்கு பிறிதொரு உறுப்பினரை நியமிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்குத் தடை உத்தரவு வழங்கக் கோரி அச்சபையின் முன்னாள் தவிசாளர் சின்னராசா யோகேஸ்வரன் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த 05▶





# பாதாள உலகக் கும்பலை வேரோடு பிடுங்குவோம்!

## ராஜபக்ஷக்களின் ஆதரவால்தான் அது வளர்ந்தது என்றும் நீதி அமைச்சர் பகிரங்கக் குற்றச்சாட்டு

இலங்கையில் நீண்டகாலமாக வேரூன்றியுள்ள பாதாள உலகக் குழுக்களையும், போதைப்பொருள் மாபியாக்களையும் வேரோடு பிடுங்கி எறிவதற்கு எமது அரசு தீர்மானித்துள்ளது என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார அதிரடியாகத் தெரிவித்தார்.

நாட்டின் சட்ட ஒழுங்கைச் சீர்குலைக்கும் இத்தகைய குற்றக் கும்பல்களுடன் தொடர்புடைய எவரும், எத்தகு அதிகாரப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர், "நாட்டில் பாதாள உலகக் குழுக்கள் இந்தளவுக்குக் கட்டற்று வளர்ந்தமைக்கு கடந்த கால ஆட்சியாளர்களே பொறுப்புக் கூற வேண்டும்" என்றும் சாடினார்.

"இன்று நாடு எதிர்கொள்ளும் இந்த அச்சுறுத்தலான சூழலுக்கு ராஜபக்ஷக்களின் ஆட்சியே அடித்தளம் இட்டது. அவர்களது அரசியல் ஆதரவே இக்குழுக்கள் இன்று விஸ்வரூபம் எடுக்கக் காரணம்" என்றும் அவர் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார்.

"இலங்கையில் பாரிய குற்றங்களைப் புரிந்துவிட்டு, வெளிநாடுகளில் சொகுசு வாழ்க்கை வாழும் பாதாள உலகத் தலைவர்களைக் குறிவைத்து அரசு புதிய வியூகங்களை வகுத்துள்ளது. வெளிநாடுகளில் தலைமறைவாக இருக்கும் சகல பாதாள உலக உறுப்பினர்களையும் சர்வதேச பிடியாணைகள் ஊடாகக் கைது செய்து, அவர்களை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து சிறையில் அடைப்போம்." – என்றும் நீதி அமைச்சர் உறுதியளித்தார்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க சர்வதேச பொலிஸார் இலங்கை அரசுக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர் என்று குறிப்பிட்ட அவர், தொழில்நுட்ப ரீதியாகவும் புலனாய்வு ரீதியாகவும் இக்குற்றவாளிகளைக் கண்காணிக்கும் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

# வானில் வந்த கும்பல் நடத்திய வாள்வெட்டில் இளைஞர் சாவு!

## மூவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

மொனராகலை, படல்கும்புரை பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்ற கோரமான வாள்வெட்டுத் தாக்குதலில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

ஹயஸ் ரக வானொன்றில் வந்த இனந்தெரியாத வன்முறைக் கும்பலொன்றே இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை முன்னெடுத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இரவு படல்கும்புரை பிரதேசத்தில் நான்கு இளைஞர்கள் நின்று கொண்டிருந்த வேளையில், அங்கு வந்த வன்முறைக் கும்பல் அவர்கள் மீது சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளது.



இந்தத் தாக்குதலில் படல்கும்புரை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த ஏனைய மூன்று இளைஞர்களும் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை நடத்திய பின்னர் வன்முறைக் கும்பல் வந்த வாகனத்திலேயே தப்பிச் சென்றுள்ளது.

தனிப்பட்ட பகையினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதா அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காகப் பொலிஸார் தேடுதல் வேட்டையையும் ஆரம்பித்துள்ளனர்.




# தோல்விகளை மறைக்க ராஜபக்ஷக்கள் மீது பழிபோடாதீர்கள்!

## ராஜபக்ஷக்கள் காலத்தில் பாதாளக் குழுக்கள் ஒடுக்கப்பட்ட விதம் மக்களுக்குத் தெரியும் என்றும் நீதி அமைச்சருக்கு ‘மொட்டு’ பதிலடி

இலங்கையில் அதிகரித்துள்ள பாதாள உலகக் குழுக்களின் அட்டூழியங்களையும், போதைப்பொருள் மாபியாக்களையும் கட்டுப்படுத்த முடியாத அநுர அரசு, தனது நிர்வாகத் தோல்விகளை மறைக்க ராஜபக்ஷக்கள் மீது வீண் பழிசுமத்துகின்றது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சாடியுள்ளது.

நாட்டில் பாதாள உலகக் குழுக்களும், போதைப்பொருள் மாபியாக்களும் விஸ்வரூபம் எடுக்க ராஜபக்ஷக்களின் ஆட்சியே காரணம் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே மொட்டுக் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் ஊடகங்களிடம் மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதை மறைக்க முடியாது. ஒவ்வொரு முறையும் தங்களால் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியாதபோது, கடந்த கால ஆட்சியாளர்களைக் கைகாட்டுவது தற்போதைய அமைச்சர்களின் வாடிக்கையாகிவிட்டது. ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் பாதாள உலகக் குழுக்கள் எவ்வாறு ஒடுக்கப்பட்டன என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.” – என்றும் அவர் தெரிவித்தார்.

நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணாயக்காரவின் கருத்துக்கள் வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவை எனச் சுட்டிக்காட்டிய சாகர காரியவசம், ”பாதாள உலகத்தினரைக் கைது செய்வதற்குப் பதிலாக, அரசியல் ரீதியாக எங்களைப் பலவீனப்படுத்தவே அரசு முயற்சி செய்கின்றது.” – என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெறும் வாய்ச்சவடால்களால் மாத்திரம் பாதாள உலகத்தை ஒழிக்க முடியாது என்றும், அதற்குத் தேவையான ஆளுமையும் திட்டமிடலும் இந்த அரசிடம் இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

“முன்னாள் ஆட்சியாளர்கள் மீது பழிபோடுவதை நிறுத்திவிட்டு, வீதிகளில் சுட்டுக் கொல்லப்படும் மக்களின் பாதுகாப்பை முதலில் உறுதிப்படுத்துங்கள்.” – என்றும் அவர் பகிரங்க சவால் விடுத்தார்.

# பாடசாலைக் காவலாளி உட்பட இருவர் ‘ஐஸ்’ போதைப்பொருளுடன் சிக்கினர்!

கொழும்பு, கோமாகமை பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போது, ‘ஐஸ்’ போதைப் பொருளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பாடசாலை ஒன்றின் காவலாளி எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கடுவெலை மற்றும் கெஸ்பாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 31 மற்றும் 34 வயதுடைய நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ‘ஐஸ்’ போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.



கைதானவர்களில் 34 வயதுடைய நபர், அப்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் காவலாளியாகப் பணியாற்றி வருபவர் என ஆரம்பகட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்கள் நீண்டகாலமாக இப்பகுதிகளில் போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபட்டு வந்தனரா என்பது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கூட்டணியாகவே அடுத்த தேர்தல்!

## ஐ.தே.க. உறுதி

எதிர்வரும் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து கூட்டணியாகவே எதிர்கொள்ளும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹறின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுக்கு இடையிலான கூட்டணிப் பேச்சு எதிர்வரும் ஏப்ரல் மாதம் இறுதி செய்யப்படும். கூட்டணியாகவே அடுத்த தேர்தலை எதிர்கொள்வோம். அதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தி இணைவுக்கு தாமதப்படுத்தினால் அது அந்தக் கட்சிக்கே பாதகமாக அமையும். இணைவுக்குரிய பேச்சு நடக்கும்போது அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்குரிய உத்தரவாதத்தைக் கோரினால் கலந்துரையாடல் முறிவடையலாம். ஏனெனில் ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகைமையை செயலில் காண்பிக்க வேண்டும்." – என்றார்.

### வீட்டின் பொருள்களைத் திருடி விற்று

# போதைப்பொருளுக்கு அடிமையான மகனை வாளால் வெட்டிப் படுகொலை செய்த தந்தை

### அம்பாந்தோட்டையில் அதிர்ச்சிச் சம்பவம்

வீட்டின் பொருட்களைத் திருடி விற்று போதைப்பொருள் பாவித்த மகனை, தந்தை வாளால் வெட்டிப் படுகொலை செய்த அதிர்ச்சிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை அம்பாந்தோட்டை, வலஸ்முல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 22 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய 45 வயதுடைய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞர் நீண்டகாலமாகப் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி இருந்தார் எனவும், இதற்காக வீட்டிலுள்ள பெறுமதிமிக்க பொருட்களைத் திருடி விற்று வந்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



நேற்று மாலை, வீட்டின் பொருளொன்றைத் திருடிக்கொண்டு தப்பிக்க முயன்ற மகனை, தந்தை கையும் களவுமாகப் பிடித்துள்ளார்.

மகன் பிடிபட்டதையடுத்து தந்தைக்கும் மகனுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதன்போது மதுபோதையில் இருந்த தந்தை, ஆத்திரமடைந்து வீட்டில் இருந்த வாளால் மகனின் தலையில் பலமாக வெட்டியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த மகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்த பொலிஸார், உயிரிழந்தவரின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள தந்தையிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## தமிழரசுக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கைத் தாக்கல் செய்த மனுதாரர் வழக்கு விசாரணை முடியும் வரை தமது இடத்துக்குப் பிறிதொரு உறுப்பினரைத் தமிழரசுக் கட்சி நியமிப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பெற்றிருந்தார்.

ஆயினும், இன்று இந்த வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது எதிர் மனுதாரரான தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனின் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணி நிரான் அங்கிட்டல் முன்னிலையாகி வாதிட்டார். அந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் சின்னையா யோகேஸ்வரனின் மனுவை இன்று தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ஏற்கனவே கரைத்துரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கப்பட்ட சின்னராசா யோகேஸ்வரனின் இடத்துக்குப் பிறிதொருவரை உறுப்பினராகத் தமிழரசுக் கட்சி நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சரணடைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், 2009 மே மாதம் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதித் தருணங்கள் குறித்துப் பல முக்கிய இரகசியங்களை வெளிப்படுத்தினார்.

**ராஜபக்ஷக்களின் பேச்சுவார்த்தை**

"விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவதற்கு வழிவகுக்கும் வகையில், 2009 மே 17ஆம் திகதி காலை மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அச்சமயம் புலிகளின் தலைவர்கள் சுமார் 400 மீற்றர் பரப்பளவிற்குள் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். இன்னும் சில மணித்தியாலங்களில் தாம் கொல்லப்படுவோம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது" என்று சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

**சரணடைய மறுத்த விடுதலைப்புலிகள்**

ராஜபக்ஷக்கள் முன்வைத்த சரணடையும் கோரிக்கையை புலிகளின் தலைவர்கள் நிராகரித்ததாகத் தெரிவித்த அவர், "புலிகள் இராணுவத்திடம் சரணடைய விரும்பவில்லை. மாறாக, அவர்கள் ஒரு மூன்றாம் தரப்பினரிடமே (சர்வதேச அமைப்புகள்) சரணடைய விரும்பினர். ஆனால், ராஜபக்ஷக்கள் அதனை எதிர்த்ததுடன், இராணுவத்திடமே சரணடைய வேண்டும் என வலியுறுத்தினர். இதனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது" – என்றார்.

**வெளியான காணொளி ஆதாரம்**

இச்சந்திப்பின் போது, மே 17 மாலை அப்போதைய பாதுகாப்புச் செயலாளருக்கும் சவேந்திர சில்வாவுக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படும் தொலைபேசி உரையாடல் அடங்கிய காணொளி ஒன்றையும் பொன்சேகா வெளியிட்டார்.

"இந்தச் சம்பவங்கள் நடந்தபோது நான் சீனாவில் இருந்தேன். சர்வதேச அமைப்புகளுடனான இந்தப் பேச்சுவார்த்தைகள் குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை. இராணுவத்தினர் புலிகளின் தலைவர்களைக் காப்பாற்ற விரும்பவில்லை அவர்களை அழிக்கவே திட்டமிட்டிருந்தனர். ராஜபக்ஷக்களின் கோரிக்கையை புலிகள் ஏற்க மறுத்தமையால், மே 19 அன்று இராணுவத்தால் அவர்களை முற்றாக ஒழிக்க முடிந்தது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## 22 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதக் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 22 இந்திய மீனவர்கள் நான்கு படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நெடுந்தீவு மற்றும் மன்னார் ஆகிய கடல் பகுதிகளில் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

**நெடுந்தீவு கடற்பரப்பு**

நெடுந்தீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இவர்களிடமிருந்து இரண்டு படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

**மன்னார் கடற்பரப்பு**

இதேவேளை, மன்னார் கடற்பரப்பிற்குள் நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட மேலும் 10 இந்திய மீனவர்கள் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டனர்.

**மேலதிக நடவடிக்கை**

கைது செய்யப்பட்ட 22 மீனவர்களும் அவர்களது நான்கு படகுகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அந்தந்தப் பிரதேச கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளைத் தடுக்கும் நோக்கில் இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"AI Impact Summit 2026" சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் இந்தியாவிற்குப் பயணமானார். ஐந்து நாட்கள் நடைபெறும் இம் மாநாட்டின் இன்றைய அமர்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி, விசேட உரையொன்றையும் நிகழ்த்தினார்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை மனித குலத்தின் மேம்பாட்டிற்காகவும், பொறுப்புணர்வுடனும் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச தொழில்நுட்ப ஆளுமை மற்றும் அதன் சவால்களை எதிர்கொள்வது குறித்து ஜனாதிபதி தனது உரையில் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

உலக நாடுகளின் அரச தலைவர்கள் மற்றும் சர்வதேச தொழில்நுட்பத் துறை சார்ந்த முன்னணி நிறுவனங்களின்




பிரதானிகளின் பங்கேற்புடன் நடைபெற்று வரும் இம்மாநாட்டில், சுமார் 20 நாடுகளின் தலைவர்களும், 45 இற்கும் மேற்பட்ட நாடுகளின் உயர்நிலை பிரதிநிதிகளும் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதையில் சாரத்தியம்

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் வாகனங்களின் சாரதிகள் போதையில் சாரத்தியம் செய்வதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்கான செயற்பாட்டை பொலிஸ் போக்குவரத்து முகாமைத்துவம் மற்றும் வீதிப் பாதுகாப்பு பிரிவு முழு முனைப்புடன் முன்னெடுத்து இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டில் மொத்தமாக போதையில் சாரத்தியம் செய்த 427 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் இந்த வருடம் இந்த விவகாரத்தில் முழு தீவிரத்துடன் பொலிஸார் களத்தில் இறங்கியமையால் கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 2,700க்கும் அதிகமான சாரதிகள் போதையுடன் வாகனங்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சட்ட நடவடிக்கைகளின் தீவிர நடைமுறையாக்கம், விரிவாக்கப்பட்ட வீதியோரப் பரிசோதனைகள், மருத்துவ அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து போக்குவரத்துப் பொலிஸார் எடுத்த நடவடிக்கைகள் என்பன இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

போக்குவரத்து அதிகம் உள்ள பகுதிகளில் இலக்கு வைக்கப்பட்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

பொதுப் போக்குவரத்து சேவைகளைத் தினமும் நம்பி இருக்கும் பயணிகள், ஏனைய வாகனங்களில் பயணிக்கும் தரப்பினர் மற்றும் பாதசாரிகளின் நலனை முன்னிறுத்தி இந்த வலுவான கண்டறிதல் மற்றும் சட்ட நடைமுறையாக்கத்தின் செயற்பாட்டை நாம் நோக்க வேண்டும்.

வெறுமனே சாலையோர போதைப் பொருள் சோதனைக் கருவிகளை மாத்திரம் நம்பி இருக்காமல், கைது செய்யப்படுவோரை உடனடியாகவே மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தும் செயற்பாடும் முழு அளவில் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த விடயத்தில் பொலிஸ் துறையும் மருத்துவத்துறையும் இணைந்து மக்கள் நலனுக்காகப் பணியாற்ற முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

போதைப் பொருள் பாவனையில் மது போன்றவற்றுக்கு அப்பால், பொதுவாக கஞ்சா மற்றும் கொக்கெயின் பாவனைக்கு அடிமையான சாரதிகள் அதிகம் சிக்கி இருக்கின்றனர். தவிரவும், ஹெரோயின், ஐஸ் போன்றவை மற்றும் சில வகையான மருந்து மாத்திரைகளுடன் தொடர்பு பட்ட போதைப்பொருள் பாவனையாளர்களும் சாரத்தியம் செய்யும் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதிக போக்குவரத்து நெருக்கடி கொண்ட புறக்கோட்டை, பாணந்துறை மற்றும் மொறட்டுவை போன்ற முக்கிய போக்குவரத்து மையங்களில் வாராந்தம் இத்தகைய நடமாடும் அதிரடிச் சோதனை மையங்களைச் செயற்படுத்துவதாக போக்குவரத்து அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பயணிகளினதும் பாதசாரிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்த விடயத்தில் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கப்படுவது முக்கியமாகும்.

பதினைந்து மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் சாரதிகளுக்கு பயணிகளைக் கையாள்வது தொடர்பில் விசேட பயிற்சி அளித்து, சான்றிதழ் வழங்கி, அந்தச் சான்றிதழ் உள்ளவர்கள் மட்டுமே அத்தகைய எண்ணிக்கை கூடிய பயணிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்ல முடியும் என்ற ஒழுங்கு முறையும் தற்போது நடைமுறைக்கு வர இருப்பதாகத் தெரிகிறது.

போதையில் சாரத்தியம் செய்வது என்பது சமூகப் பேரழிவுக்கு வழி செய்யும் ஒரு கேடு கெட்ட நடவடிக்கையாகும். அது விடயத்தில் பொறுத்துக் கொள்ள முடியாத தீவிரத்தை இப்போது அரசுத் தலைமை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கதே. தவிர்க்கவே முடியாத - சமூகத்திற்கு மிக முக்கியமான - கட்டுப்படுத்தல் நடவடிக்கை இது.

பொலிஸாரின் இந்தக் கெடுபிடியால் சமூகத்தில் சில அதிருப்திகள் எழுமாயினும், சமூகப் பாதுகாப்புக் கருதி அதனை சமூகம் பொறுத்துக் கொள்வது கட்டாயமாகும்.

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த மகாபாரத தொடர் அருளுரை

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக் கிழமை மகாபாரத தொடர் அருளுரை இடம்பெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கு இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வ வடிவேல் நிகழ்த்தவுள்ளார்.





# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இன்று காலை கோலாகலமாக ஆரம்பம்!

## நான்கு நாள்கள் 12 அமர்வுகள், 3,252 பேருக்குப் பட்டங்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 40 ஆவது பொதுப் பட்டமளிப்பு வைபவம் இன்று காலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளுடன் பட்டமளிப்பு விழா நிகழ்வுகள் ஆம்பமாகின.

பல்கலைக்கழக வேந்தர் தகைசால் பேராசிரியர் இ.குமாரவடிவேல் பட்டமளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், வேந்தர் தகைசால் பேராசிரியர் இ.குமாரவடிவேலும், துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜாவும் பட்டங்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள், தகைமைச் சான்றிதழ்களையும் மாணவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தனர்.

பண்பாட்டு அணிவகுப்புடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், அலுவலர்கள், பேராசிரியர்கள், பீடாதிபதிகள், நிதியாளர், நூலகர், மற்றும் பதிவாளர் அணிவகுத்து வர, கொடி குடை ஆலவட்டங்கள் சகிதம் விழா அரங்குக்கு வருகைதந்த துணைவேந்தரும், வேந்தரும் பட்டங்களையும், பரிசில்கள் மற்றும் தகைமைச் சான்றிதழ்களையும் வழங்கினர்.

இன்று வியாழக்கிழமை முதல் எதிர்

தொடர்ச்சி▼













# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இன்று காலை கோலாகலமாக ஆரம்பம்!

தொடர்ச்சி▲

வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைவரை நான்கு நாள்கள் பன்னிரண்டு அமர்வுகளாகப் பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு வைபவத்தில் 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்த முறை பட்டமளிப்பு விழாவின் போது, 376 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 557 உள்வாரி மாணவர்களுக்கும், 252 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

66 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களுடன் ஒருவருக்கு வியாபார நிர்வாகத்தில் சான்றிதழ் அடங்கலாக 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில், உயர் பட்டப் படிப்புகள் பீடம், இணைந்த சுகாதார விஞ்ஞானபீடம், கலைப்பீடம், விஞ்ஞானபீடம், விவசாயபீடம், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், மருத்துவ பீடம், இந்துக் கற்கைள் பீடம், சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைய வவுனியா வளாகத்தைச் சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில், திறந்த மற்றும் தொலைக்கல்வி முறைமை மூலம் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்த பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

உயர் பட்டப்படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 376 மாணவர்கள் உயர் பட்டத் தகைமைகளைப் பெறவுள்ளனர். அவர்களில் கலாநிதிப் பட்டத்தை 8 பேரும் முது மெய்யியல்மாணிப் பட்டத்தை 16 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தை 7 பேரும், சுகாதார முகாமைத்துவத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை ஒருவரும், பொது நிர்வாகத்தில் முதுகலைமாணிப் பட்டத்தை ஒருவரும், சைவசித்தாந்தத்தில் முதுமாணிப் பட்டத்தை ஒருவரும், கல்வியில் முதுமாணிப்பட்டத்தை 154 மாணவர்களும், நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 12 மாணவர்களும், கல்வியில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 118 மாணவர்களும், வியாபார நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டத்தை 42 பேரும் பெறுவதுடன், ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தலில் பட்டப்பின் தகைமைச் சான்றிதழை 16 பேரும் பெறவிருக்கின்றனர்.

உள்வாரி மாணவர்களாக, மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 137 மாணவர்கள்






# யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இன்று காலை கோலாகலமாக ஆரம்பம்!

தொடர்ச்சி▲

மருத்துவமாணி சத்திரசிகிச்சைமாணிப் பட்டத்தையும் விவசாய பீடத்தைச் சேர்ந்த 118 மாணவர்கள் விவசாயத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெறவுள்ளனர்.

இவர்களுடன் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்திலிருந்து மருந்தக வியல்மாணி சிறப்புப் பட்டத்தை 49 மாணவர்களும், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தை 64 மாணவர்களும், தாதியியலில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தை 46 மாணவர்களும் பெற வுள்ளனர்.

அத்துடன், முகாமைத்துவக் கற்கை கள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து சிறப்பு வியாபார நிர்வாகமாணிப் பட்டத்தை 358 மாணவர்களும், வியாபார நிர்வாகமாணிப் (பொது) பட்டத்தை 11 மாணவர்களும், சிறப்பு வணிகமாணிப் பட்டத்தை 107 மாண வர்களும், வணிகமாணிப் (பொது) பட் டத்தை இருவரும் பெறவிருக்கின்றனர்.

இவர்களுடன், கலைப்பீடத்தில் இருந்து சிறப்புக் கலைமாணிப்பட்டத்தை 333 மாணவர்களும், பொதுக் கலை மாணிப் பட்டத்தை 182 மாணவர்களும், மொழிபெயர்ப்புக் கற்கைகளில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தை 29 மாண வர்களும், சட்டமாணியில் சிறப்புப் பட் டத்தை 91 மாணவர்களும், கலைமாணி சிறப்புப் பட்டத்தை (பழைய பாடத்திட் டத்தில்) ஐவரும், கலைமாணிப் (பொது) பட்டத்தை 15 பேரும் பெறவிருக்கின்றனர்.

சேர். பொன் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தைச் சேர்ந்த 169 மாணவர்கள் நடனம், இசை மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் துறைகளில் நுண்கலைமாணிப் பட்டத்தையும், மேலும் நடனம் மற்றும் இசையில் நுண்கலைமாணிப் பட்டத்தை (பழைய பாடத் திட்டத்தில்) ஒவ்வொருவரும் பெறவுள்ளனர்.

இவர்களுடன், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 97 பேர் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தையும், 46 பேர் பிரயோக விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான மாணிப் பட்டத்தையும், 79 பேர் விஞ் ஞானமாணிப் (பொதுப்) பட்டத்தையும், 18 பேர் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 23 பேர் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞா னமாணிப் பட்டத்தையும், பெறவுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் வவுனியா வளாகத்தின் மாணவர்களும் பட்டம் பெற உள்ளனர். அதன் பிரயோக விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த 16 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு விஞ்ஞா னமாணிப் பட்டத்தையும், 24 மாணவர்கள் கணினி விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 49 மாணவர்கள் சுற்றுச் சூழல் விஞ் ஞானத்தில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தையும், 100 மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டத்தையும் 47 மாணவர்கள் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ் ஞானமாணிப் பட்டத்தையும், 18 பேர் சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணிப் பட்டத்தையும் பெற விருக் கின்றனர்.



வியாபாரக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 65 மாணவர்கள் கணக்கிய லிலும் நிதியியலிலும் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 19 மாணவர்கள் வியாபாரப் பொருளி யலில் சிறப்பு வியாபார முகாமைத்து வமாணிப் பட்டத்தையும், 29 மாண வர்கள் மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 28 மாணவர்கள் சந் தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் சிறப்பு வியாபார முகாமைத்துவமாணிப் பட்டத்தையும், 24 மாணவர்கள் வியா பார முகாமைத்துவமாணிப் (பொதுப்) பட்டத்தையும், 76 மாணவர்கள் செயற் றிட்ட முகாமைத்துவத்தில் சிறப்பு வியா பார முகாமைத்துவமாணிப் பட்டத்தை யும், 12 மாணவர்கள் செயற்றிட்ட முகா மைத்துவத்தில் வியாபார முகாமைத்து வமாணி பட்டத்தையும் பெறவிருக்கின் றனர். மேலும், தொழில்நுட்பக் கற்கை கள் பீடத்தில் இருந்து 69 மாணவர்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் இளமாணி சிறப்புப் பட்டத்தையும் பெற இருக்கின்றனர்.

இவர்களுடன், யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் திறந்த மற்றும் தொலைதூரக் கற்கைகள் முறைமை மூலம் பட்டக் கற்கைகளைப் பூர்த்தி செய்த 76 மாணவர்கள் சிறப்பு வணிகமாணிப் பட்டத்தையும், 15 மாண வர்கள் வணிகமாணிப் பட்டத்தையும், 161 மாணவர்கள் வியாபார முகா மைத்து வமாணிப் பட்டத்தையும் பெற வுள்ளனர்.

மேலும், 21 மாணவர்கள் தமிழ் பால பண்டிதர் தகைமைச் சான்றிதழ்களை யும், 9 பேர் விஞ்ஞானத்தில் உயர் தகைமைச் சான்றிதழ்களையும், 5 பேர் விஞ்ஞானத்தில் தகைமைச் சான் றிதழ்களையும், ஒருவர் கலைத்துறை யில் உயர் தகைமைச் சான்றிதழையும், 30 பேர் சொத்து மதிப்பீட்டில் தகைமைச் சான்றிதழ்களையும், ஒருவர் வியாபார நிர்வாகத்தில் சான்றிதழையும் பெற்றுக் கொள்வது இந்தப் பட்டமளிப்பு விழாவின் போது உறுதிப்படுத்தப்படும்.

மேலும், இப்பட்டமளிப்பு விழாவில் சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 94 தங்கப்பதக்கங்களும், 69 பரிசில் களும், 15 புலமைப்பரிசில்களும் வழங் கப்பட இருக்கின்றன.

ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழ கத்தால் வழங்கப்படும் சீர்பெறும் விருதான பேராசிரியர் அழகையா துரை ராசா தங்கப் பதக்கங்கள் வழங் கப்படவிருக்கின்றன. இதன்படி 2021 ஆம் கல்வியாண்டுக்கு உரிய பல் கலைக்கழக அடிப்படையிலான தங்கப் பதக்கத்தைக் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெற்றுக் கொள்கின்றார்.

பீடமட்டத்தில் 2022 ஆம் கல்வி யாண்டுக்கு உரிய தங்கப் பதக்கத்தைக் கலைப்பீடத்தில் இருந்து ஒருவரும், விஞ்ஞான பீடத்தில் இருந்து ஒருவரும் பெறுகிறார்கள்.

பீடமட்டத்தில் 2023 ஆம் கல்வி யாண்டுக்குரிய தங்கப் பதக்கத்தை முகாமைத்துக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இருந்து ஒருவரும், மருத்துவ பீடத்தில் இருந்து ஒருவரும் பெறுகின்றனர்.

மேலும், 2022 ஆம் கல்வியாண் டுக்கு உரிய தூய மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் சிறந்த செயலாற்று கைக்கான பேராசிரியர் கந்தையா குணரட்ணம் தங்கப் பதக்கத்தைப் பல்கலைக்கழக மட்டத்தில் இருந்து விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவர் பெறவிருக்கின்றமையும் குறிப்பிடத் தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பயணிக்கும் வேளையில், 40 ஆவது பட்டமளிப்பு விழா இடம்பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.



# நஞ்சற்ற உணவுப் பொருள்கள் கைவினைப் பொருள் கண்காட்சி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று பிரதேச சபைக்கு உட்பட்ட விவேகானந்தபுரத்தில் கிராமத்தில் அமைந்துள்ள பெண் தொழில் முயற்சியாளர்களால் நஞ்சற்ற இயற்கையான உணவுப் பொருள்களும் கைவினைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்தக் கிராம மக்களின் சிறு கைத்தொழில் முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக அவர்களால் உற்பத்தி செய்யப்படும் இயற்கை முறையில் நஞ்சற்ற இயற்கையான உணவுப் பொருள்களும் கைவினைப் பொருள்கண்காட்சியும் நேற்று கொட்டும் மழைக்கு மத்தியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் போரதீவு பற்று பிரதேச சபை தவிசாளர் விமலநாதன் மதிமேனன் கலந்து கொண்டு உற்பத்திகளைப் பார்வையிட்டார்.

சுய தொழில் முயற்சியாளர்களால் தமக்கான நிரந்தர கடைத் தொகுதியை பெற்று தருமாறு தவிசாளரிடம் கோரிக்கை முன்வைத்ததனர். அந்தப் பகுதி தொழில் முயற்சியாளர்களின் கோரிக்கை தொடர்பில் வெகுவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தவிசாளர் இதன்போது தெரிவித்தார்.



# பதுளை பள்ளகெட்டுவ பகுதியில் தோட்டத் தொழிலாளர் பகிஷ்கரிப்பு

(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை மாவட்டத்தின் பள்ளகெட்டுவ பகுதியில் அமைந்துள்ள எல்ல நிவ்பர்க் தோட்டத் தொழிலாளர்கள் இன்று பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் நிலவும் சமீபத்திய கால நிலை மாற்றங்களால் தேயிலைக் கொழுந்து அளவு குறைந்துள்ள நிலையிலும், அதிகளவில் கொழுந்து பறிக்க நிர்வாகம் அழுத்தம் தருவதாக தொழிலாளர்கள் குற்றம் சாட்டினர்.

இதன் காரணமாகத் தங்களுக்குக் கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு வருகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், நாளாந்த ஊதியம் குறைக்கப்படுவதாகவும் தொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். தோட்டங்கள் முறையான பராமரிப்பின்றி உள்ளதாக பொது மக்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

நிவ்பர்க் தோட்டத்தின் மேற்பிரிவு, கீழ் பிரிவு மற்றும் கோவுஸ்ஸ பிரிவு களைச் சேர்ந்த தொழிலாளர்கள் இன்று காலை 8.30 மணி முதல் இந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.




# பயங்கரவாதத் தடைச் சட்டம் எங்களுக்குத் தேவையில்லை!

## யாழ். பல்கலைச் சமூகம் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

எந்தவொரு பயங்கரவாதத் தடைச் சட்டமும் எங்களுக்குத் தேவையில்லை. அதை அரசு உடனடியாக இரத்துச் செய்யவேண்டும் என்று வலுயுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தின் கையெழுத்துப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் தொடர்ந்து நான்கு நாள்களுக்குமுன்னெடுக்கப்படவுள்ளது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபை மீளப் பெறு என்றும் வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு என்றும் வலியுறுத்தி பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்தே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.









# பண்டாரவளையில் விபத்து ஆசிரியை ஒருவர் உயிரிழப்பு

(பசறை நிருபர்)

பண்டாரவளை பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், பண்டாரவளை சென். தோமஸ் கல்லூரி ஆங்கில பாட ஆசிரியரும் பல்துறை ஆற்றல்மிக்க படைப்பாளியுமான செல்வி சண்முகவேல் பிரஷாந்தி உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த அவர் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சண்முகவேல் பிரஷாந்தி கல்விச் சேவையுடன் கலை மற்றும் இலக்கியத் துறைகளிலும் ஆழ்ந்த ஆர்வமுடையவராக விளங்கியவர். குறிப்பாக இசையமைப்பில் அதிக ஈடுபாட்டுடன், புத்தாக்க சிந்தனைகளால் புதிய படைப்புகளை உருவாக்கிய திறமையாளராகப் பரீச்சயமானவர்.

இந்திய முன்னணி இசையமைப்பாளர்களான கங்கை அமரன் மற்றும் தீனா ஆகியோரின் பாராட்டுகளையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இசை ஆர்வமிக்க படைப்பாளியாகவும், அர்ப்பணிப்புமிக்க ஆசிரியராகவும்



திகழ்ந்த இவரின் திடீர் மறைவு, மலையக கல்வி சமூகத்துக்குப் பேரிழப்பாக அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தொழில் பயிற்சிகளைப் பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்

(நவாஸ்)

கல்வி, உயர் கல்வி, தொழிற்கல்வி அமைச்சால் அட்டாளைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட உயர்தரப் பாடசாலைகளில் கடந்த 2025 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு மூன்று மாத கால ஏஜளுவுு தொழில் வழிகாட்டல் பயிற்சி நெறியானது ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், தொழில் வழிகாட்டல், உடற்கல்வி, அழகியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஜீவகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஏ.அஹமட் அப்கரும் விசேட அதிதிகளாக அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் எவ்.நஹீஜா முசாபிர், அக்கரைப்பற்று பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் அப்துல் ஹமீத் பௌஸ் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக அட்டாளைச்சேனை பிரதேச செயலக கணக்காளர் எம்.எவ்.பர்கான், அட்டாளைச்சேனை மு.ம.வியின் அதிபர் ஏ.எல். மொஹமட் பாயிஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.பி.சலீம், திறன் அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் வி.நடனகுமார், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் குறித்த பயிற்சி நெறியைப் போதித்த ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். கற்பித்த ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.





# சேனைப்புலவு பாலத்தை அமைக்க வலியுறுத்தினார் ரவிகரன் எம்.பி.!

**(விஜயரத்தினம் சரவணன்)**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவின், நெடுங்கேணி, சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள சேனைப்புலவு பாலத்தை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் குறித்த பாலம் உரிய திட்டங்கள் ஊடக உள்ளவாங்கப்பட்டு நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளரால் இதன்போது பதிலளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

அண்மையில் வவுனியா வடக்கு பிரதேச சபை உறுப்பினர் செல்வராசா சுசீலன், சமூக செயற்பாட்டாளர் ச. வசந்தகுமார் மற்றும் அந்தப் பகுதி மக்களின் அழைப்பை ஏற்று சேனைப் புலவுப் பகுதிக்கு நேரடியாக களவிஜயம் மேற்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து நெருக்கடி தொடர்பில் பார்வையிட்டிருந்தார்.

குறித்த சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் பாலத்தை அமைப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சேனைப் புலவு முதலாம் ஒழுங்கையில் பாலத்தை நிர்மாணிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியுள்ளார்.


குறித்த பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் பாலம் ஒன்று அமைக்கப்படவேண்டும். குறிப்பாக நெடுங்கேணி குளத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர் பாதையை ஊடறுத்துப் பாய்வதால் அவ்வீதியின் போக்குவரத்துத் தடைப்படுகின்றது.

இதனால் 150 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய நிலங்களுக்கும், தோட்டங்களுக்கும் செல்லும் மக்கள் பலத்த போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு இவ்வாறு போக்குவரத்துத் தடை ஏற்படுவதால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அவசிய சேவைகளைப் பெறுவதற்குக் கூட இடர்படவேண்டிய நிலை காணப்படுகின்றது. குறிப்பாக மருத்துவ சேவையை பெறுவதற்குகூட மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்தே பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. – என்று தெரிவித்தார்.

இந்த நிலையில், உரிய திட்டங்களில் உள்வாங்கப்பட்டு சேனைப்புலவு முதலாம் ஒழுங்கையில் பாலத்தை நிர்மாணிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இதன்போது வவுனியா வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரால் இதன்போது பதிலளிக்கப்பட்டது.





# நோன்பு காலத்தை முன்னிட்டு விசேட சுகாதார பரிசோதனை!

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேசத்தில் புனித நோன்பு காலத்தை முன்னிட்டு ஹோட்டல்கள் மற்றும் பேரீச்சம்பழ மொத்த விற்பனை நிலையங்களில் விசேட சுகாதாரப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் நடைபெற்ற இந்தப் பணிகள், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதனின் வழிநடத்தலில் முன்னெடுக்கப்பட்டன.

பரிசோதனைகளின்போது உணவுப் பொருள்களின் தரம், சேமிப்பு முறைகள், காலாவதி திகதிகள், சுற்றுப்புறத் தூய்மை, பணியாளர்களின் தனிநபர் சுகாதாரம் உள்ளிட்ட அம்சங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டன.

நோன்புக் காலத்தில் அதிக அளவில் விற்பனை செய்யப்படும் பேரீச்சம் பழங்களின் தரநிலைகள் மற்றும் பாதுகாப்பான சேமிப்பு நடைமுறைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

உணவுகளை சுகாதாரமான முறையில் தயாரித்து, சேமித்து, விற்பனை செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாக வர்த்தகர்களுக்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டன. சுகாதார வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றுமாறு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பொது மக்கள் பாதுகாப்பான மற்றும் தரமான உணவுகளைப் பெறுவதை உறுதி செய்வதே இந்த விசேட சுகாதார பரிசோதனைகளின் முக்கிய நோக்கமாகும் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.






# சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

## மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தெரிவிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பகுதியில் சமீப காலமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது திணைக்களம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ் கண்ணா தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களில் தெரிவு செய்யப்பட்ட 36 மீனவர்களுக்கு மீன்பிடி வலை தொகுதி வழங்கும் நிகழ்வு இன்று காலை மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களத்தில் இடம் பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் மீனவர்களுக்கு உதவித் திட்டங்கள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிரான கட்டுப்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மீனவர்களுக்கான புதிய வலை, உபகரணங்கள் வழங்கும்போது அவை கடற்றொழில் திணைக்களத்தின் அனுமதி பெற்றவையாக இருக்க வேண்டும். தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்துவதைத் தவிர்க்கும் வகையில் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புயல் மற்றும் இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக ஐந்து பேர் கொண்ட ஆய்வுக் குழு அமைக்கப்பட்டு சேதங்கள் கணக்கிடப்பட்டு இழப்பீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மன்னார் பகுதியில் சமீப காலமாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் டைனமைட் (வெடிபொருள்) பயன்படுத்தி மீன் பிடித்த இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இன்று இரண்டு நபர்கள் வெடி பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு இந்திய இழுவைப் படகுகள் 10 இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

சுற்றுச்சூழல் மற்றும் மீன் வளப் பாதுகாப்பு கருதி டிராக்டர் இயந்திரம் மூலம் கரைவலை இழுப்பதற்கு அரசு தடை விதித்துள்ளது.

இது குறித்து மீனவர் சங்கங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் பாரம்பரிய முறையில் கைகளால் வலை இழுக்க அனுமதி உண்டு. ஆனால் இயந்திரங்கள் பயன்படுத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது திணைக்களம் கடுமையான நடவடிக்கை எடுக்கும். இது குறித்து மீனவ சமூகத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அதிகாரி கேட்டுக்கொண்டார்.

குறித்த நிகழ்வில் மெசிடோ நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதோடு, மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 36 மீனவர்களுக்கு குறித்த வலைத்தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.











# 4ஆவது போட்டியிலும் வென்றது மேற்கிந்தியத்தீவுகள்



## ஷாய் ஹோப்

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 75 | 46 | 04 | 06 |

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் தனது 4ஆவது லீக் போட்டியிலும் வென்றது மேற்கிந்தியத் தீவுகள்.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் இன்றைய ஆட்டத்தில் 'சி' பிரிவில் இடம் பெற்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் – இத்தாலி அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இத்தாலி அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைச் சேர்த்தது.

அதிரடியாக விளையாடிய அணித்தலைவர் ஷாய் ஹோப் 75 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

பின்னர் 166 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய இத்தாலி அணி, 18 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களையே சேர்த்தது.

இதன்மூலம் 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் ஷாய் ஹோப் தெரிவானார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி லீக் சுற்றில் தாம் எதிர்கொண்ட 4 போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பில் பரபரப்பு!

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் தற்போது கொழும்பில் நடைபெற்றுவரும் போட்டி பரபரப்பு நிலையை எட்டியுள்ளது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் 38ஆவது லீக் போட்டி இன்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

இந்தப் போட்டி பி பிரிவில் உள்ள இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

பி பிரிவில் இடம்பெற்ற இவ்விரு அணிகளும் இதுவரை எந்வொரு போட்டியிலும் தோற்காத நிலையில் களம் கண்டன.

இதில் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது.

அதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பதும் நிசங்க மற்றும் குசல் பெரேரா ஆகியோர் களமிறங்கினர்.

அணி 54 ஓட்டங்களைப் பெற்ற போது குசல் பெரேரா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த குசல் மெண்டிஸ் தனது பங்குக்கு 14 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

மறுமுனையில் நின்று ஆடிய பதும் நிசங்க அரைச் சதம் கடந்து 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆடிய கமிந்து மெண்டிஸ் (7), தசுன் ஷானக (6) ஹெமந்த (0) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

இதற்கிடையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பவன் ரத்நாயக்க 44 ஓட்டங்களை விளாசிச் சென்றார்.

பின்னர் 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்களைச் சேர்த்தது.

சிம்பாப்வே அணி சார்பாக பந்துவீச்சில், பிளெஸிங் முஸரபனி, பிராண்ட் எவன்ஸ், கிறேம் கிறேமர் ஆகியோர்தலா இருவிக்கெட்டுகளையும் ரியான் பர்ட் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 179 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, இச்செய்தி எழுதப்படும்வரை விக்கெட் இழப்பின்றி ஆறாவது ஓவரில் 50 ஓட்டங்களைக் கடந்திருந்தது.

இந்தப் போட்டியில் சிம்பாப்வே அணி இலங்கைக்குக் கடும் நெருக் கடியைக் கொடுத்து வெற்றிபெறும் இலக்குடன் ஆடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# விசாகப்பட்டினத்தில் கடற்படை அணிவகுப்பில் பங்கேற்றார் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு

விசாகப்பட்டினத்தில் சர்வதேச கடற்படை அணிவகுப்பில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்றார்.

ஆந்திர மாநிலம், விசாகப் பட்டினத்தில் நேற்று சர்வதேச கடற்படை அணிவகுப்பு நடைபெற்றது. இதில் இந்திய போர்க்கப்பல்கள் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த 71 போர்க்கப்பல்கள் பங்கேற்றன.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டி னத்தில் சர்வதேச கடற்படை அணி வகுப்பு (ஐ.எஃப்.ஆர்) நேற்று பிரம மாண்டமாக தொடங்கியது. இதில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக கலந்து கொண டார். முதலில் அவர் கடற்படையின் அணிவகுப்பு மரியாதையை ஏற் றார்.

அதன் பின்னர், இந்திய கடற்படை சார்பில் 45 போர்க் கப்பல்கள், அமெ ரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு நாடுகளின் 17 போர்க்கப்பல்கள் மற்றும் 7 வணிக மற்றும் எல்லை பாதுகாப்பு படை கப்பல்கள் என மொத்தம் 71 கப்பல்கள் 6 வரிசையில் அணிவகுப்பு நடத்தின.

இதன் பின்னர் இந்திய கடற்படை கப்பலில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, ஆந்திர ஆளுநர் அப்துல் நசீர், முதல்வர் சந்திரபாபு நாயுடு, துணை முதல்வர் பவன் கல்யாண் ஆகியோர் சென்று சர்வதேச கடற்படையின் அணிவகுப்பை பார்வையிட்டனர்.







# தி.மு.க. கூட்டணியில் இணைந்தது தே.மு.தி.க.

## ஸ்டாலினுடன் பிரேமலதா சந்திப்பு



எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தே.மு.தி.க. எந்தப் பக்கம் என்று நீண்ட நாள்களாக எதிர்பார்ப்பு நிலவிய நிலையில், யாரும் எதிர்பாராத நகர்வாக தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்துள்ளது.

சென்னையில் திமுக தலைமை யகமான அண்ணா அறிவாலயத்தில் நேற்று காலை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், பொருளாளர் எல்.கே.சுதீஷ் ஆகியோர் சந்திப்பு நிகழ்த்தினர். இந்த சந்திப்பின் போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், மூத்த அமைச்சர்கள் சேகர்பாபு உள்ளிட்டோர், கனிமொழி எம்.பி. உள்ளிட்டோர் இருந்தனர்.

கடந்த 2011ஆம் ஆண்டு விஜய காந்த் தலைமையில் தே.மு.தி.க. தான் எதிர்கொண்ட முதல் சட்டப்பேரவைத் தேர்தலிலேயே 29 எம்.எல்.ஏ.க்களுடன் வலுவான அரசியல் பயணத்தைத் தொடங்கியது.

ஆனால், அதன்பின்னர் அ.தி.மு. கவுடன் ஏற்பட்ட விரிசல் காரணமாக 2016 சட்டப்பேரவைத் தேர்தலில் விஜயகாந்தை முதல்வர் வேட்பாளராக அறிவித்து மக்கள் நலக் கூட்டணியாக களம் கண்டு தோல்வியை சந்தித்தது.

2021 இல் அ.ம.மு.க, எஸ்.டி.பி.ஐ கட்சிகளுடன் இணைந்து தேர்தலை சந்தித்தது.

இந்நிலையில், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க இணைந் துள்ளது. எதிர்வரும் தேர்தலில் 7 தொகுதிகள் வரையிலும், ஒரு ராஜ்யசபா சீட்டும் கேட்க தே.மு.தி.க. திட்டமிட் டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொண்டர்கள், நிர்வாகிகள் விருப்பப்படி தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ளோம்

## தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவிப்பு



நீண்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் தே.மு.தி.க. இன்று தி.மு.கவுடன் தேர்தல் கூட்டணி அமைத்துள்ளது.

தி.மு.க. தலைவரும், தமிழக முதல் வருமான மு.க.ஸ்டாலினுடன் கூட்டணி அமைத்த பின்னர் செய்தியாளர்களை சந்தித்த பிரேமலதா விஜயகாந்த், தான் ஏற்கெனவே சொன்னபடி தே.மு.தி.க. தொண்டர்கள், நிர்வாகிகள் விருப்பப்படி தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ள தாகக் கூறினார்.

தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் மேலும் தெரி விக்கையில்,

“தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தே.மு.தி.க. யாருடன் கூட்டணி என்ற கேள்வி நீண்ட நாள்களாக நிலவி வந்தது. அதன்படி, இன்று தி.மு.கவுடன் தே.மு.தி.க. கூட்டணியை உறுதி செய்துள்ளோம்.

தே.மு.தி.க நிர்வாகிகள், தொண்டர் கள் விரும்பியபடி தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ளோம். தே.மு.தி.க. முதன் முறையாக தி.மு.கவுடன் கூட்டணி அமைத்துள்ளது. 2016-லேயே இந்தக் கூட்டணி அமைந்திருக்க வேண்டும். பழம் நழுவி பாலில் விழும் என்று கருணாநிதி கூறியிருந்தார். ஆனால், அது இப்போது கேப்டன் இல்லாதபோது தாமதமாக நடந்துள்ளது.

மற்றபடி இந்தத் தேர்தலில் தே.மு.தி.க. எத்தனை தொகுதிகளில் போட்டியிடும், எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடும் போன்றவை எல்லாம் அண்ணன் ஸ்டாலின் அறிவிப்பார். இதற்காக ஒரு குழு அமைக்கப்படும். அந்தக் குழு தி.மு.கவுடன் ஆலோசனை செய்தபின்னர் முறைப்படி அறிவிப்பு வெளியாகும்.

இந்தக் கூட்டணி தே.மு.தி.கவினர், பொது மக்களும் வரவேற்கும் கூட்ட ணியாக உள்ளது. 200 இற்கும் மேற் பட்ட இடங்களில் வெற்றி பெறுவது உறுதி.

ராஜ்யசபா எம்.பி. ஆசனம் குறித்து எல்லாம் அண்ணன் ஸ்டாலின் உரிய நேரத்தில் அறிவிப்பார்.” என்று கூறினார்.

# இஸ்ரேலின் மேற்குக் கரை விரிவாக்கத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையின் 85 நாடுகள் எதிர்ப்பு





ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் விரிவாக்க நடவடிக்கைகளைக் கண்டித்து, ஐக்கிய நாடுகள் சபையின் 85 உறுப்பு நாடுகள் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

ஐ.நாவுக்கான பாலஸ்தீனத் தூதரகம் வெளியிட்டுள்ள இந்தப் பட்டியலில் இலங்கை இடம்பெறவில்லை.

அரபு நாடுகள் கூட்டமைப்பு, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய மூன்று முக்கிய உலகளாவிய அமைப்புகளுடன் இணைந்து 85 நாடுகள் இந்தக் கண்டனத்தைப் பதிவு செய்துள்ளன.

அந்த அறிக்கையில் "மேற்குக் கரையில் இஸ்ரேலின் சட்டவிரோத இருப்பை விரிவுபடுத்தும் நோக்கில் எடுக்கப்படும் ஒருதலைப்பட்சமான முடிவுகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இத்தகைய நடவடிக்கைகள் சர்வதேச சட்டங்களுக்கு முரணானவை. மேற்குக் கரையின் எந்தப் பகுதியையும் இஸ்ரேலுடன் இணைக்கும் முயற்சியை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்." என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கண்டன அறிக்கையில் சீனா, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், கனடா, பிரித்தானியா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற வல்லரசு நாடுகளும், தெற்காசிய நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் மாலைத்தீவுகள் ஆகியவையும் கையெழுத்திட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்தியாவும் இலங்கையும் இதில் கையெழுத்திடவில்லை.

இஸ்ரேல் அண்மையில் மேற்குக் கரைப் பகுதிகளில் நிலப் பதிவுகளை மீண்டும் ஆரம்பிக்க அந்த நாட்டு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

இது பாலஸ்தீன நிலங்களை இஸ்ரேல் உத்தியோகபூர்வமாகத் தன்னுடன் இணைப்பதற்கான ஒரு படிநிலை என பாலஸ்தீனத் தரப்பு குற்றம் சாட்டுகிறது.

இந்த நிலையில், சர்வதேச மட்டத்தில் இஸ்ரேலுக்கு எதிராகப் பெரும் கண்டன அலை எழுந்துள்ள போதிலும், இலங்கை அந்தப் பட்டியலில் இணையாமல் தவிர்ந்துள்ளமை அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

### சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்கும் திட்டம்:

# பிரித்தானியாவின் பிரதமருக்கு டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை





பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ள சாகோஸ் தீவுகளை மொரிஷியஸிடம் ஒப்படைக்கும் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிகப்பெரிய தவறு என்று விமர்சித்துள்ளார்.

குறிப்பாக, அங்குள்ள 'டியாகோ கார்சியா' இராணுவத் தளத்தை எக்காரணம் கொண்டும் கைவிட வேண்டாம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தனது சமூக வலைதளப் பக்கமான 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப், பிரித்தானிய பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு நேரடியாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவரது பதிவில், நாடுகளுக்கு இடையிலான விவகாரங்களில் 100 ஆண்டுகால குத்தகை ஒப்பந்தங்கள் பாதுகாப்பானவை அல்ல.

ஈரான் தனது அணுசக்தி திட்டம் தொடர்பாக இணக்கமான முடிவுக்கு வராவிட்டால், அந்த நாட்டின் தாக்குதல்களை முறியடிக்க டியாகோ கார்சியா தளம் அமெரிக்காவிற்கு மிகவும் அவசியமானது.

பிரித்தானியா தனது நிலப்பரப்பை விட்டுக் கொடுப்பது அந்த நாட்டுக்கு இழைக்கப்படும் அவமானம். 'வோக்கிசம்' போன்ற கொள்கைகளுக்கு இடமளிக்காமல் பிரித்தானியா வலிமையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், ட்ரம்ப்பின் விமர்சனங்களுக்கு பதிலளித்துள்ள பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சு, சாகோஸ் தீவுகள் தொடர்பான ஒப்பந்தம் பிரித்தானியா மற்றும் அதன் நட்பு நாடுகளின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமானது என்று தெரிவித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமே டியாகோ கார்சியா இராணுவத் தளத்தின் எதிர்காலத்தை நீண்ட காலத்திற்கு (99 ஆண்டுகள் குத்தகை) உறுதிப்படுத்த முடியும் என அந்நாடு விளக்கம் அளித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று, அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு, இந்த ஒப்பந்தத்திற்கு அதிகாரப்பூர்வமாக ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனால், அடுத்த 24 மணி நேரத்திற்குள் ஜனாதிபதி ட்ரம்ப் அதற்கு மாறான கருத்தை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ட்ரம்ப்பின் இந்த அதிரடி மாற்றத்தை விமர்சித்துள்ள பிரித்தானிய எதிர்க்கட்சிகள், பிரதமர் கீர் ஸ்டார்மருக்கு இது ஒரு பெரும் அவமானம் என்று கூறியுள்ளன.

இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள இந்தத் தீவுகள் 1814 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவின் கட்டுப்பாட்டில் உள்ளன.

1965 ஆம் ஆண்டு இவை மொரிஷியஸிடமிருந்து பிரிக்கப்பட்டு தனிப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டன.

இதில் உள்ள டியாகோ கார்சியா தீவு, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் மிக முக்கியமான கூட்டு இராணுவத் தளமாகச் செயல்பட்டு வருகிறது.

கனடா முரசு

வியாழக்கிழமை 19/02/2026

**கனடா எல்லையில் சிக்கிய ட்ரக்கில் 266 கிலோ கிராம் போதைப்பொருள்**



02




# குடிவரவு முறைமையில் மாற்றம்: இராணுவத்தினருக்கு முன்னுரிமை

கனடாவின் "எக்ஸ்பிரஸ் என்ட்ரி" குடிவரவு முறைமையில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய மாற்றங்களின்படி, நிரந்தர வதிவிட அனுமதி வழங்கும்போது ஆராய்ச்சியாளர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், போக்குவரத்துத் துறையினர் மற்றும் இராணுவப் பணியாளர்களுக்கு இனி முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

குறிப்பாகக் கட்டுமானம்,சுகாதாரம், கல்வி மற்றும் நிதித்துறை சார்ந்த சிரேஷ்ட மேலாளர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், விமானிகள் மற்றும் வாகன திருத்துநர்கள் ஆகியோர் இந்த முன்னுரிமைப் பட்டியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

02

# 18,500 வெளிநாட்டவர்களை வெளியேற்றிய கனடா அரசு



கடந்த ஆண்டில், 18,500 வெளிநாட்டவர்களை அமைதியாக நாட்டைவிட்டு வெளியேற்றியுள்ளது கனடா அரசு.

கனடா அரசு, 2025 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில், 18,500 இற்கும் அதிகமான வெளிநாட்டவர்களை அமைதியாக நாட்டைவிட்டு வெளியேற்றியதாக கனேடிய எல்லை பாதுகாப்பு ஏஜன்சி வெளியிட்டுள்ள தரவுகள் தெரிவிக்கின்றன.

2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலான 10 மாதங்களில் 18,785 வெளிநாட்டவர்கள் கனடா அரசால் வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அவர்களில், சுமார் 2,500 பேர் இந்தியர்கள்.

இதுபோக, மேலும் 29,542 பேரை கனடாவை விட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளில் கனடா அரசு ஈடுபட்டு வருகிறது.

வெளியேற்றப்பட்டவர்களில் பலர் குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்கள். என்றாலும், அதிகளவானோர், அகதிக் கோரிக்கை விதிகளுக்கு இணங்காததால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.




# கனடா எல்லையில் சிக்கிய ட்ரக்கில் 266 கிலோ கிராம் போதைப்பொருள்

கனடா எல்லையில் ட்ரக் ஒன்றிலிருந்து 266 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கனடா அமெரிக்க எல்லையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த கனேடிய அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் ட்ரக் ஒன்றை சோதனையிட்டனர்.

மோப்ப நாய் ஒன்றின் உதவியுடன் அந்த ட்ரக்கை சோதனையிட்ட அதிகாரிகள், அந்த ட்ரக்கில் உடைமைகள் வைக்கும் பைகளுக்குள் போதைப் பொருள் மறைத்துவைக்கப்பட்டுள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர்.

16 பைகளுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த அந்த போதைப்பொருளின் எடை, 266. 4 கிலோ கிராம் ஆகும்.

ஒன்ராறியோவைச் சேர்ந்தவரான அந்த ட்ரக்கின் சாரதியான 29 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் கனேடிய பொலிசாரிடம் ஒப்படைக்க, அவர் நீதிபதியின் முன் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.




**குடிவரவு முறைமையில்...**

**(A1ஆம் பக்கத் தொடர்ச்சி)**

அத்துடன், வெளிநாட்டு இராணுவத்தில் 10 ஆண்டு அனுபவம் பெற்று, கனடியப் படையில் பணிபுரிய வாய்ப்புப் பெற்றவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளிலும் சில கடுமையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, குறைந்தபட்ச பணி அனுபவத் தேவை 6 மாதங்களிலிருந்து ஒரு ஆண்டாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அனுபவம் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் பெற்றதாக இருக்க வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயம் மற்றும் உணவு சார்ந்த தொழில் பிரிவுகள் இந்தப் முன்னுரிமைப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

கனடாவில் ஒரு வருடத்திற்கு மேல் தங்கியிருப்பவர்கள் புகலிடம் கோருவதைத் தவிர்த்து, தகுதியுள்ளவர்கள் முறையான வேலைவாய்ப்பு வழிகளில் விண்ணப்பிக்க வேண்டும் என குடிவரவு அமைச்சர் லேனா மெட்லெட்ஜ் டயப் வலியுறுத்தியுள்ளார்.



# கனடாவிலிருந்து போதைப் பொருள் கடத்திய 8 பேருக்கு 95 ஆண்டுகள் சிறைத் தண்டனை

கனடா மற்றும் அவுஸ்திரேலியாவை இணைக்கும் போதைப் பொருள் கடத்தல் திட்டத்தில் ஈடுபட்ட 8 பேருக்கு மொத்தமாக 95 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு, கனோலா எண்ணெய் போத்தல்களில் மறைத்த பல தொன் நீரையுடைய திரவ மெத்தாம் ஃபெட்டமின் கடத்தலுடன் தொடர்பு பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரிகள், 2022 டிசம்பர் முதல் 2023 ஜூன் வரை கனடா மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு இடையில் நான்கு கடத்தல் முயற்சிகளை தடுப்பதாக தெரிவித்தனர்.

இந்த முயற்சிகளில், 2.5 தொன் நிறைக்கு மேற்பட்ட மெத்தா, 17 லிற்றர் கனோலா எண்ணெய் போத்தல்களில் வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முயன்ற போது பிடிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட 8 பேரில் 07 அவுஸ்திரேலியர்கள் மற்றும் ஒருவர் அமெரிக்கர் அனைவரும் குற்றவாளிகளாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் இரு நாடுகளிலும் அதிகாரிகள் வெளியிடவில்லை.



# கனடாவின் ஐக்கியத்திற்காக போராடுவோம்: கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் தெரிவிப்பு

அல்பெர்டா மாகாணம் தனியாக பிரிந்து செல்வதற்கான இயக்கம் முன்னேறுவதை எதிர்த்து, தனது கட்சி கனடாவின் ஐக்கியத்தை பாதுகாக்க போராடும் என கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியே பொலியேவ் தெரிவித்துள்ளார்.

எங்கள் கன்சர்வேட்டிவ்கள் முழுமையாக கூட்டாட்சி கட்சியாளர்கள் எனவும் தனது குழுவில் ஒருவரும் அல்பெர்டா பிரிவினையை ஆதரிக்கவில்லை எனவும் பொலியேவ் தெரிவித்துள்ளார்.

பொலியேவ் தன்னை ஒரு பெருமைமிக்க கூட்டாட்சி ஆதரிப்பாளர் மற்றும் அல்பெர்டாவில் பிறந்த, வளர்ந்தவர் என கூறியுள்ளார்.

ஜனவரியில் கன்சர்வேட்டிவ் மாநாட்டில் வழங்கிய உரையில், லிபரல் கட்சியின் கொள்கைகளுக்கே பிரிவினை இயக்கங்களுக்கு வழி வகுத்ததாக பொலியேவ் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒட்டாவா அல்பெர்டாவின் எரிசக்தி துறையையும் கியுபெக் பிராந்திய அதிகாரத்தையும் தடுக்க முயற்சித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.